மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :

ஒப்பந்தத்தின்கீழ் வந்தவர்கள்	43,830
ஒப்பந்தத்தின்கீழ் அடங்காதவர்கள்	14,728
மொத்தம் இலங்கையிலிருந்து தமிழகத்திற்கு வந்து சேர்ந்த அகதிகள்.	58,558

Pre-school children in Dharmapuri district

* 360. Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether there is any proposal to feed pre-school children with the aid of UNICEF or Central Government in the Dharmapuri district; and

(b) if so, when it will be implemented?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) 'யூனிசெப்' நிறுவன உதவியுடன் சத்து உணவு வழங்கு திட்டம் எதுவும் தற்போது ஆலோசனையில் இல்லை எனினும், சில பாலர் பள்ளிகளில் மகளிர் பாலர்களுக்கான செய்முறை சத்து உணவுத் திட்டம், இந்திய அரசின் ஒருங்கிணைந்த திட்டத்தின்கீழ்ச் செயல் படுத்தப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில், தருமபுரி மாவட்டம் பென்னுகரம், காவேரிப்பட்டணம் ஆகிய இரண்டு ஊராட்சி ஒன்றியங்கள் உட்பட தெரிந்தெடுக்கப்பட்ட 28 வட்டாரங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

THIRU B. VENKATASWAMY : Sir, as the entire Dharmapuri district especially Hosur and Denkanikottah taluks are backward areas, may I know whether the Hon. Minister will introduce such a scheme at least in Hosur and Denkanikottah taluks ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இதுபோன்ற திட்டங்கள் பெண்ணுகரம், காவேரிப்பட்டினம், பிறகு கிருஷ்ணகிரி ஆகிய வட்டங்களில்தான் மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டுப்படி செயமுறைத் திட்டமும், சத்துணவுத் திட்டமும் இதுவரையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் அத்திட்டத்தை நீட்டிக்கும் போது தரலாம். மேலும், குழந்தைகளுக்காக தனியாக சத்துணவுத் திட்டம் என்பதை ஒரு சிறப்புத் திட்டமாக மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் குடிசைவாழ் குழந்தைகளுக்கும் மலைவாழ் குழந்தைகளுக்கும் தரப்பட்டுவருகிறது. அந்தத் திட்டம் இப்போது தர்மபுரிக்கு நீட்டிக்கப்பட்டிருக்கிறது.

Office building for Social Welfare Board.

* 361 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether the State Social Welfare Board has made any request to the Government for grant of money for constructing an office building; and

(b) if so, the details thereof?

1971 டிசம்பர் 14]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இல்லை.

திரு. என் டென்னிஸ் : இதுபோன்ற பொது நிறுவனங்களுக்கு இத்தகைய காரியங்களுக்காக நிதி வழங்க அரசாங்கம் திட்டம் ஏதாவது வகுத்துள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : கோவையில் நடை பெற்ற மாநாட்டின்போது மாநில சமூக நல வாரியத்தின் தலைவர் அவர்கள் இப்படி ஒரு கட்டடம் நிறுவுவதற்கு அரசு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டார்கள். எந்த அளவிற்கான கட்டடத்திற்கு போகிறார்கள் என்ற செயற்குறிப்பு அனுப்பாமல் கேட்டிருக் கிறார்கள். அவர்கள் அனுப்பிய பிறகு அதுபற்றி பரிசீலனை செய்து கட்டடத்திற்கான ஏற்பாட்டைச் செய்யலாம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : இந்த சோஷியல் வெல்பேர் போர்டு ஆபீஸ் மிகவும் நெருக்கடியான இடத்தில் இருக்கிற படியால் கட்டடம் கட்டுவதற்கு தற்போது பணம் கொடுத்து உதவுவதற்கு இயலாவிட்டாலும் அரசாங்க அலுவலகங்கள் இருக்கிற கட்டடத்தில் ஒரு பகுதியையாவது ஒதுக்கிக் கொடுப்பார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அவசியம் என்று கருதினால் அதற்குரிய நடவடிக்கை எடுக்கலாம்.

வெல்லம் முதலியவை விற்க உரிமம்

* 362 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வெல்லம், கண்டசாரி சர்க்கரை இவைகள் விற்பதற்கு லைசென்ஸ் தேவை இல்லையென அரசு ஆணை பிறப்பித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆம்.

திரு. என். கிட்டப்பா : தமிழ்நாட்டின் தேவையை விட அதிகமான அளவில் வெல்லம் இங்கு உற்பத்தி செய்யப்படுகிறது என்ற அளவில் அதை வெளி மாநிலங்களுக்கு அனுப்பக்கூடிய செயல்முறைகள் ஏதாவது எடுக்கப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தமிழ்நாட்டிலிருந்து வெளிமாநிலங்களுக்கு வெல்லம் அனுப்பப்படுவது உண்மைதான். அதிகமாக உற்பத்தியாகியிருக்கிறது என்று சொல்வதற்கில்லை.

திரு. த. சோனையா : வெளிமாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்வதற்கு அரசாங்கத்திற்கு வியாபாரிகளிடமிருந்து ஏதாவது விண்ணப்பங்கள் வந்துள்ளனவா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.